# ஐங்குறுநூற்று ஆய்வேடுகள் – அடைவும் மதிப்பீடும் (Aiṅkuṟunūṟṟu āyvēṭukaḷ – aṭaivum matippīṭum)

*ம.லோகேஸ்வரன் | M. Logeshwaran*[33]

**Abstract:** The research paper construct to make the bibliography and evaluate the research works in the educational institutions that subject to about the aiṅkuṟunūṟu one of the ancient cankam anthology. Research of Tamilology beginning with the publications in the journals like centamiḻ, centamiḻc celvi etc., and finally enter to the educational firms. award of the doctoral degree to the Mrs. Gnanambal and Mu.Va., the research shows.

கல்வி நிறுவனங்களில் ஐங்குறுநூற்றை முதன்மையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளை அடைவுபடுத்தி அவற்றை மதிப்பீடு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**குறிச்சொற்கள்** : ஐங்குறுநூறு, ஆய்வேடுகள், அடைவு, மதிப்பீடு, கல்வி, நிறுவனங்களில்

***Citation:*** *லோகேஸ்வரன் ம., (February 2021), "ஐங்குறுநூற்று ஆய்வேடுகள் - அடைவும் மதிப்பீடும் (Aiṅkuṟunūṟṟu āyvēṭukaḷ - aṭaivum matippīṭum)", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

***

### காலமும் கருத்தும்

தமிழியலில் ஆய்வு என்பது 1900க்குப் பின்னர்த் துவங்குகிறது. துவக்கக் காலத்தில் தமிழாய்வுகளைச் செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, புலமை, தமிழ்ப்பொழில் முதலான சிற்றிதழ்களும் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஞாலத்தமிழ், ஐந்தமிழ், வளர்தமிழ் என்று கல்விசார் அமைப்புகளும் முன்னெடுத்துள்ளன. இம்முயற்சிகளின் நீட்சியாகவே இன்றைய ஆய்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் அமைந்திருக்கின்றன. 1943இல் திருமதி ஞானாம்பாள் சங்க இலக்கியத்தில் முதல் எம்.லிட். பட்டத்தையும் 1947இல் மு.வரதராசனார் முதல் பி.எச்.டி. பட்டத் தையும் பெற்றிருந்தனர் (கு.வெ.பாலசுப்பிரமணியன், 2008:155). கல்வி நிறுவனம் சார்ந்து இவ்விரு சங்க இலக்கிய ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய கால வரிசையில் ஐங்குறுநூற்றின் ஆய்வுத் தடம் எத்தகையது? எனும் கருதுகோளை நோக்கி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாய்வுக்கான எல்லை 1903 முதல் 2015 வரையாகும்.

ஐங்குறுநூறு 1903இல் உ.வே.சாமிநாதையரால் முதன்முதலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அக்காலக்கட்டம் முதல் 2015வரையில் ஐங்குறுநூற்றை மையமாகக் கொண்டு கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை (ஆய்வேடுகளை) மூவகைப்படுத்தலாம்.

- முனைவர்பட்ட ஆய்வேடுகள்
- எம்.லிட். பட்ட ஆய்வேடு
- ஆய்வியல் நிறைஞர்பட்ட ஆய்வேடுகள்

### முனைவர்பட்ட ஆய்வேடுகள்

தமிழகப் பல்கலைக்கழகங்களின் வழியாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் 2015 வரை 5 முனைவர் பட்ட ஆய்வேடுகள் ஒப்படைக்கப் பெற்றுள்ளன.

தொல்காப்பியர் இலக்கியக் கோட்பாடு களும் ஐங்குறுநூறும் (1985), ந. காந்திமதி லட்சுமி

சங்க நூல்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு- ஒப்பீடு (2002), ச.சுபாஷ்

[33] தமிழ் - உதவிப் பேராசிரியர், டி.ஆர்.பி.சி.சி.சி. இந்துக்கல்லூரி, சென்னை

ஐங்குறுநூறு காட்டும் சமுதாயம் (2004), பொ.சக்திவேல்

ஐங்குறுநூற்றில் முதல், கரு, உரி (2007), இரா.மலர்விழி

ஐங்குறுநூற்றில் உயிரியல் செய்திகள் (2010), இரா.மாரிமுத்து

**எம்.லிட். பட்ட ஆய்வேடு**

ஐங்குறுநூறு ஓர் ஆய்வு (1973), ம.ரா.போ. குருசாமி, சென்னைப் பல்கலைக்கழகம்.

**ஆய்வியல் நிறைஞர்பட்ட ஆய்வேடுகள்**

ஐங்குறுநூற்றில் முல்லைத்திணை (1978), அ.தட்சிணாமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம்.

ஐங்குறுநூற்றில் தாயும் சேயும் ஓர் ஆய்வு (1987), அ.கோகிலவாணி, சென்னைப் பல்கலைக்கழகம்.

ஐங்குறுநூற்றில் தோழி (1984), மு.மரகதம், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

ஐங்குறுநூற்றில் மருதத்திணை (1986), மு. சிகாமணி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் பதிப்பு ஓர் ஆய்வு (மருதத்திணை, நெய்தல்திணை) (1991), வீ.ஜெயராஜ், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்.

ஐங்குறுநூற்றில் பரதவர் வாழ்வியல் (1992), செ.கி.இளங்கோவன், பாரதியார் பல்கலைக் கழகம், கோவை.

மேற்கண்ட அடைவின்வழி ஐங்குறுநூற்றிற்கு மொத்தமாக 12 ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுருக்கம்கருதி, முனைவர்பட்ட ஆய்வேடுகளை மட்டும் மதிப்பிடுவதாக இனிவரும் பகுதி அமைத்துக் கொள்ளப்படுகின்றது.

**தொல்காப்பியர் இலக்கியக் கோட்பாடுகளும் ஐங்குறுநூறும்**

இது 1985ஆம் ஆண்டு ந.காந்திமதி லட்சுமி என்பவரால் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடாகும். இவ்வாய்வேடு ஐங்குறுநூறு அறிமுகம், ஐங்குறுநூறு கூற்று வகைகள், ஐங்குறுநூற்றில் முதற்பொருளும் கருப்பொருளும், ஐங்குறுநூற்றில் அணிகள், உரையாசிரியர்கள் கண்ட ஐங்குறுநூறு என ஐந்து இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. ஐங்குறுநூற்றின் அமைப்பு, திட்டமிட்ட பகுப்புமுறை, பத்துக்களின் அமைப்புமுறை, அடியளவிலான பகுப்புமுறை ஆகியன முதல் இயலில் விளக்கப்பெற்றுள்ளன. ஐங்குறுநூற்றுத் திணைப்பகுப்பில் உள்ள கூற்றுகள் தொல்காப்பிய விதிகளுக்கேற்ப பொருந்தி யுள்ளன எனும் நோக்கத்தை இரண்டாம் இயலில் நிறுவியுள்ளார். மூன்றாம் இயலில் முதற்பொருள், கருப்பொருள் ஆகியன ஐங்குறுநூற்றில் பயின்று வந்துள்ள முறைமை குறித்து விளக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ அடைவுபடுத்துகின்ற முயற்சியாக இவ்வியல் அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றில் கையாளப்பெற்றுள்ள உவமை, உள்ளுறை, இறைச்சி குறித்து விளக்குவதாக நான்காம் இயலில் அமைந்திருக்கிறது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளில் ஐங்குறுநூறு எடுத்தாளப்பெற்றுள்ள திறம் குறித்து ஐந்தாம் இயலில் விளக்கப் பெற்றுள்ளது.

1985இல் இத்தகைய ஆய்வேடு வெளிவருவது எளிதானதன்று. பனுவலை நேர்த்தியாக மூலம் பிறழாமல் சுவைக்கத் தெரிந்தால் மட்டுமே இத்தகைய பகுப்புமுறைகளும் விளக்கங்களும் சாத்திய மாகும். இன்றுவரை ஐங்குறுநூற்றிற்கு நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகளில் மிகுந்த கவனத்துக்குரிய ஒன்றாக இவ்வாய்வு திகழ்கின்றது. தொல்காப்பிய விதிகளைப் பலவிடங்களில் ஐங்குறுநூற்றுடன் பொருத்திய பின்னர், தொல்காப்பிய இலக்கியக் கோட்பாட்டுடன் ஐங்குறுநூறு பெரும்பான்மையாக ஒன்றுபடுகின்றது எனும் ஆய்வு முடிவினை இறுதியாக அளித்துள்ளதைக் கொண்டு ஆய்வின் செழுமையை அறிந்து கொள்ளலாம். இவ்வாய்வு பிற்காலத்தில் நூலாக வெளிவந்து ஆய்வாளர்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சங்க நூல்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு - ஒப்பீடு**

இது 2002ஆம் ஆண்டு ச. சுபாஷ் என்பவரால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடாகும். சங்க இலக்கியம் பற்றிய பொதுவான செய்திகள் ஐங்குறுநூறு, குறுந்தொகை பற்றிய பொதுவான செய்திகள், தொல்காப்பியக் கோட்பாட்டுடன் ஐங்குறுநூறு, குறுந் தொகை பொருந்தியுள்ள முறையியல், அகத் துறைகள் பற்றிய சிந்தனைகள், வாழ்வியல் சிந்தனைகள் என்று இவ்வாய்வில் விளக்கப் பெற்றுள்ளன. ஏறத்தாழ தொல் காப்பியக் கோட்பாட்டடிப்படையில்தான் இவ்வாய்வு நகர்கின்றது. விளக்கமுறைத் திறனாய்வாக அமைத்துக் கொள்ளப்பட்டு, தொல்காப்பிய விதிமுறைகள் ஆங்காங்கே ஒப்பிடப் பெற்றுள்ளன. ந.காந்திமதி லட்சுமியின் ஆய்விலிருந்து வேறுபட்ட போக்கினையும் ஆய்வு நெறிமுறையையும் கொண்டிருந்தாலும் அவ்வாய்வின் தொடர்ச்சியாகக் கொள்ளவும் இடந் தருகின்றது.

**ஐங்குறுநூறு காட்டும் சமுதாயம் - ஓர் ஆய்வு**

இது 2004ஆம் ஆண்டு பொ.சக்திவேல் என்பவரால் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடாகும். பொதுவான செய்திகளை முதல் இயலில் அமைத்துள்ளார். அகவாழ்வு எனும் இயலில் பல்வேறு நாட்டுப்புறப் பாடல்கள் சான்று காட்டப்பெற்று ஐங்குறுநூற்றுடன் ஒப்பிடும் முறை பின்பற்றப்பெற்றுள்ளது. சாதி, சடங்கு, நம்பிக்கைகள் பற்றிய இயல், இன்றைய காலக்கட்ட சாதியப் பகுப்புமுறையுடன் அணுகப்பெற்றுள்ளது. சங்க காலத்தைய அகக்கூறுகளைச் சடங்குகள், நம்பிக்கையோடு தொடர்பு படுத்தி ஆராய்ந்திருப்பது இவ்வியலுக்குப் பொருத்தமானதாக இல்லை. இறைவழிபாடு, மூடநம்பிக்கை இயலிலும் நீதி, ஆட்சிமுறை என்கிற இயலிலும் மேற்கண்ட நிலைப்பாட்டைக் காணவியலுகின்றது. பனுவலில் உள்ள கருத்துகளை எடுத் துரைத்தல் எனும் தன்மையில் இவ்வாய்வு நின்றுவிட்டது. இருப்பினும் வலுவான காரண காரியங்களுடன் தொடர்புபடுத்தி விளக்கியிருந்தால் இவ்வாய்வு கூடுதல் கவனம் பெற்றிருக்கக்கூடும்.

**ஐங்குறுநூற்றில் முதல் கரு உரி**

இது 2007 ஆம் ஆண்டு இரா. மலர்விழி என்பவரால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடாகும். ஐங்குறுநூற்றுப் புலவர்கள், ஐங்குறுநூற்றில் முதற்பொருள், ஐங்குறுநூற்றில் கருப்பொருள், ஐங்குறுநூற்றில் உரிப்பொருள், ஐங்குறுநூற்றின் தனித்தன்மைகள் என ஐந்து இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளன. அடைவுபடுத்துதல் என்கிற நிலையில் இவ்வாய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதலாம். முந்தைய ஆய்வுகளில் மேலோட்டமாகக் குறிப்பிடப்பெற்ற முப்பொருள் பாகுபாடு விளக்கமாக இவ்வாய்வில் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஐங்குறுநூறு வரலாற்றில் இவ்வாய்வு தேவையான முயற்சியாகும்.

**ஐங்குறுநூற்றில் உயிரியல் செய்திகள்**

இது 2010ஆம் ஆண்டு இரா.மாரிமுத்து என்பவரால் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடாகும். ஐங்குறு நூற்றில் உயிரியல் எனப் பொது நிலையிலும் ஐந்திணைகளின் அடிப்படையில் உயிரியல் எனத் தனித்தனியாக ஐந்து இயல்களாகவும் பகுக்கப் பெற்றுள்ளன. தொல்காப்பியரின் மரபியல் செய்திகளுடன் பொருத்திப் பார்ப்பதாகவும் தற்கால அறிவியல் சிந்தனைகளுடன் எடுத்துரைப்பதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. பனுவலில் உள்ள செய்திகளை அடைவுபடுத்துதல் எனும் முயற்சியாக இவ்வாய்வைக் கருதலாம்.

**ஆய்வேடுகளின் நோக்கும் போக்கும்**

ஐங்குறுநூற்றின் கட்டமைப்பு, மொழியமைப்பு, கருத்தியல் மாற்றம், பண்பாட்டு வளர்நிலை, குடும்பம், சமூக மேலாண்மை என்று பனுவலின் உட்பரப்பு சார்ந்து மேற்கொள்ளப்படவேண்டிய ஆய்வு நிறையவுண்டு. தவிர, கோட்பாடுகளையும் மானிடவியல், ஒப்பிட்டுமுறை, மொழியியல் போன்ற அணுகுமுறைகளையும் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப் பனுவலில் ஏராளமான இடமிருக்கிறது. அவ்வாறிருக்க, ஐங்குறுநூற்றில் புலவர் எடுத்தியம்பிய

வற்றை, உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டியவற்றை மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது, அடைவுபடுத்துவது என்பது இனிவரும் காலங்களில் தவிர்க்கப்பட வேண்டும்.

**நிறைவாக**

ஐங்குறுநூற்றைப் பொருத்தவரையில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடுகள், குறுகிய எலலையை வரை யறுத்துக் கொண்டு அணுகப் பெற்றுள்ளது எனலாம். ந. காந்திமதி லட்சுமியின் ஆய்வேடு காலத்தால் முந்தையது என்றாலும் காலத்தால் நின்றது எனக் குறிப்பிடலாம். ஏனையவை தவிர்க்கப்பட வேண்டியதன்று, இன்னும் கூடுதலாக ஆராயப்பட வேண்டியனவாகும்.

**துணைநின்றவை**

*1. பாலசுப்பிரமணியன் கு.வெ., சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2008.*

*2. லோகேஸ்வரன் ம., சமூக வரலாற்றியல் நோக்கில் ஐங்குறுநூற்று ஆய்வு இயல்புகள், பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, திருச்சிராப்பள்ளி, 2014.*